(இ) அதற்கு ஆய்வு ((Investigation)) செய்ய செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) இப்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் உள்ள எல்லா சிறப்பு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான ஆய்வுச் செலவுகள் ஒரே பொது மதிப்பீட்டின் கீழ் கொண்டு வந்ததால் மருதையாறு நீர்ப்பாசன ஆய்வுத் திட்டச் செலவு எவ்வளவு என்று தனியே மதிப்பிடப்படவில்லை.

(உ) மருதையாற்று நீரில் சோடியம்குளோரைடு போன்ற உப்புக்கள் அதிகமாக கலந்திருப்பதினாலும், பாசனத்திற்குத் தகுதியற்றதாக முடிவு செய்யப்பட்டதினாலும் கைவிடப்பட்டது.

பெரியபாளையத்தில் மேம்பாலம்

* 528 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம் தரைப்பாலத்தில் வெள்ளம் வரும் போது போக்குவரத்து பாதிக்கப்படுவதால், மேம்பாலம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: பெருவழித் துறையைச் சேர்ந்த இந்த தரைப் பாலம் ஆரணியாற்றின் மேல் அமைந்திருக்கிறது. இதில் அதிகப் போக்கு வரத்து இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அரசு போக்குவரத்து பஸ்களும், வண்டிகளும் வெள்ளம்வரும்போது கவிழ்ந்து மூழ்கி விடுகின்றன. அப்போது போர் நெருக்கடி காரணமாக தரைப்பாலமாக இருப்பதை மேம்பாலமாகக் கட்ட முடியாது என்று கூறினார்கள். இப்போது நெருக்கடி நீருகிற சூழ் நிலையில் இப்போதாவது இது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மீண்டும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 1971-72-ல் பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டு நிதிநிலை நெருக்கடி காரணமாக எடுத்துக்கொள்ளப் படவில்லை. அது இப்போது பார்ட் 2 ப்ரொபோசலில் சேர்த்துக் கொள்ளப் படும்.

அன்னப்பநாய்க்கன் குப்பம் அணைக்கட்டு நீர்

* 529 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொன்னேரி வட்டம், அன்னப்ப நாய்க்கன் குப்பம் அணைக்கட்டு நீரை கும்முடிப்பூண்டி கிசா ஏரிக்கு வருமாறு செய்யத் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?